**விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தவதற்கான அறிவுறுத்தல்கள் : (ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கானது)**

**01. 2011.03.01ம் திகதியிடப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட 03(01) 2009ம் இலக்க சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.**

1.1 **கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த தற்போது கல்வி அமைச்சின் கீழ் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.**

(அ) விண்ணப்பிக்கும் பாடத்திற்குரிய பட்டத்தினையோ டிப்ளோமா பயிற்சினையோ பெற்றிருப்பதோடு குறித்த பாடத்திற்கு பொருத்தமான நியமனம் பெற்ற ஆசிரியராயிருத்தல்

(ஆ) க.பொ.த (உயர் தரம்) ( 12,13 ஆம் வகுப்புகளுக்கு) ஆசிரியராக கற்பித்தலில் ஈடுபடல் அல்லது க.பொ.த உயர்தரத்தில் குறித்த பாடத்துடன் தொடர்புடைய அதிகாரியாக கடமையில் ஈடுபடல்.

* விஞ்ஞான பாடத்திற்கான ஆங்கிலமொழிக்குரிய, (73) ஆங்கில பாடத்திற்குரிய தகைமைகளைக் கொண்ட தேசிய பாடத்திட்டத்தினைக் கற்பிக்கின்ற தனியார் பாடசாலைகளில், சர்வதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடியும்.

1.2 இல 10 ஐப் பூரணப்படுத்தும்போது விண்ணப்பிக்கும் பாடத்திற்கு பொருத்தமான தகுதியினைக் குறிப்பிடுதல் அவசியமாகும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

1.3 விண்ணப்பப்படிவத்தின் 13 ஆம் 14ஆம் பந்திகளைப் பூரணப்படுத்தும்போது "ஆம்" (yes) அல்லது "இல்லை" (No) என்பதனை தெளிவாக அடையாளமிட்டு குறித்துக்காட்டுக. அவ்வாறு குறிக்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

*** தற்போது தங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் நடைபெறுமாயின் அல்லது தாங்கள் பரீட்சை கடமைகளில் இருந்து தடைசெய்யப்பட்டிருப்பின் இப்பதவிக்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்க முடியாது.**

1.4 **தங்கள் குடும்பத்து உறுப்பினர் ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவாராயின் தங்களால் விண்ணப்பிக்க முடியாது.** குடும்ப **உறுப்பினர் எனப்படுவோர் - தங்களின் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், தங்களினதும் துணைவரினதும் சகோதர சகோதரிகளும், அவர்களது பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் ஆவர்.**

1.5 **இரண்டு பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கீழே தரப்பட்டுள்ள பாடத் தொகுதிகளுக்கிடையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.**

| | | |
|---|---|---|
| (10) இணைந்த கணிதம் | (08) விவசாய விஞ்ஞானம் | (67) தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| (07) கணிதம் | (18) விவசாய தொழினுட்பம் | (14) குடிசார் தொழினுட்பம் |
| (11) உயர் கணிதம் | (66) உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் | (15) பொறிமுறைத் தொழினுட்பவியல் |
| (16) மின், இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் | | |

1.6 இவ்விண்ணப்பப்படிவத்தின் 16 ஆம் பந்தியைத் தவிர்ந்த ஏனையவற்றை நிகழ்நிலை (Online) முறையில் பூர்த்தி செய்தபின் அதன் PDF பிரதியினை பதிவிறக்கம் (Download) செய்து அதிபரிடம் / நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கவும். புதிய விண்ணப்பதாரிகள் குறித்த சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளோடு அதிபரிடம் / நிறுவனத் தலைவரிடம் வன்பிரதிகளை சான்றுப்படுத்தி இதனுடன் இணைக்கவும்.

1.7 விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை முறையில் (Online) மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அரச பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலை முறையில் (Online) அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு அதனை நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். புதிய விண்ணப்பதாரிகள் மற்றும் ஏனைய சகல விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவத்தின் வன்பிரதிகள் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

1.8 மேற்படி பரீட்சையின் மதிப்பீட்டு நிலையங்கள் கீழ்வரும் இடங்களில்நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மதிப்பீட்டுக் காலம் 14 நாட்களாக அமையும்)

| | | |
|---|---|---|
| **01 கொழும்பு** | **20 பதுளை** | **38 கேகாலை** |
| **02 மகரகம** | **25 காலி** | **41 கண்டி** |
| **08 ஹொரண** | **27 மாத்தறை** | **50 மட்டக்களப்பு** |
| **12 நீர்கொழும்பு** | **30 குருநாகல்** | **51 வவுனியா** |
| **10 களுத்துறை** | **32 குளியாப்பிட்டி** | **53 யாழ்ப்பாணம்** |
| **13 கம்பஹா** | **35 அநுராதபுரம்** | |
| **15 இரத்தினபுரி** | | |

குறிப்பு : **போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நகரங்களில் மதிப்பீட்டு நிலையங்கள் நிறுவப்படமாட்டாது. எனவே இரண்டாவது தெரிவையும் குறிப்பிட வேண்டும்.**

*** விடைத்தாள் மதிப்பீட்டுக் காலத்தின் போது பரீட்சைத் திணைக்களத்தினால் தங்குமிட வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் முற்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.**

**02. விண்ணப்பத்தினை உறுதிப்படுத்தல் :**

ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவம் பாடசாலை அதிபராலும், வலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் வலயக்கல்வி பணிப்பாளராலும் கோட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் கோட்டக் கல்வி பணிப்பாளராலும் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை ஆசிரியர்கள் நிறுவனத் தலைவர் ஊடாகவும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**03. உறுதிப்படுத்தும் அலுவலருக்கான அறிவுறுத்தல்கள் (அதிபர் / நிறுவனத் தலைவர்):**

3.1 இப்படிவத்தில் விண்ணப்பதாரியால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையா என்பதைப் பரிசீலிக்கவும்.

3.2 மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியென 3 ஆம் பக்கத்திலுள்ள உரிய இடத்தில் கட்டாயமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.3 மேலே இல. 16 (a) இல் (i) முதல் (iv) வரையான விவரங்களின் கீழ் விண்ணப்பதாரி பற்றிய தங்கள் கணிப்பை உரிய கூடுகளில், பின்வருவனவற்றுள் தகுந்த குறியீட்டால் அடையாளப்படுத்தவும்.

**A** - சிறப்பானது **B** - நன்று **C** - சாதாரணம் **W** - திறமையின்மை

3.4 இது அந்தரங்க அறிக்கையாகும். சகல விண்ணப்படிவங்களும் தங்களால் நிகழ்நிலை (online) ஊடாக திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவ்வாறே பதிவிறக்கம் (Downloaded) செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட சகல விண்ணப்பப்படிவங்களையும் உறுதிப்படுத்திய பின் கோவைப்படுத்தப்பட்டு (புதிய விண்ணப்பதாரியாயின் உரிய இணைப்புகளுடன்) தனது அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். புதிய விண்ணப்பதாரியினதும் பாடசாலை ஆசிரியர்கள் அல்லாத சகல விண்ணப்பதாரிகளினதும் விண்ணப்பப்படிவங்களை பட்டியற்படுத்தி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **‘ விடைத்தாள் பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள், க.பொ.த (உ.தர)ப் பரீட்சை – 2023 (2024)’** எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சகல விண்ணப்பப்படிவங்களையும் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2023.12.19 என்பதை கவனிக்கவும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
மதிப்பீட்டுக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
த.பெ.இல - 1503,
கொழும்பு.

ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கும் பாடங்கள் பின்வருமாறு

**1st Stage**

| | | | |
|---|---|---|---|
| 1 | Physics (S/T/E) | 2 | Chemistry |
| 8 | Agricultural Science (S/T) | 9 | Biology (S/T/E) |
| 10 | Combined Mathematics (S/T) | 24 | Logic & Scientific Method (S/T/E) |
| 28 | Home Economics | 31 | Business Statistics |
| 32 | Business Studies (S/T/E) | 41 | Buddhism (S/T/E) |
| 42 | Hinduism (S/T/E) | 43 | Christianity |
| 44 | Islam | 45 | Buddhist Civilization |
| 46 | Hindu Civilization | 47 | Islam Civilization (T) |
| 49 | Chiristian Civilization (S/T) | 51 | Art (S/T/E) |
| 52 | Dancing (Indigenous) (S) | 53 | Dancing (Bharatha) (S/T) |
| 54 | Oriental Music (S) | 55 | Carnatic Music |
| 56 | Western Music (X) | 57 | Drama & Theatre (S) |
| 58 | Drama & Theatre (T) | 59 | Drama & Theatre (E) |
| 65 | Engineering Technology (S/T) | 66 | Bio Systems Technology |
| 71 | Sinhala (S) | 72 | Tamil |
| 73 | English | 74 | Pali |
| 75 | Sanskrit | 78 | Arabic |
| 82 | German | | |

**2nd Stage**

| | | | |
|---|---|---|---|
| 2 | Chemistry (S/T/E) | 7 | Mathematics (S/T/E) |
| 8 | Agricultrual Science (E) | 10 | Combined Mathematics (E) |
| 11 | Higher Mathematics (S/T/E) | 13 | General English |
| 14 | Civil Technology | 15 | Mechanical Technology |
| 16 | Electrical, Electronic & Inf. Tec. | 17 | Food Technology |
| 18 | Agro Technology | 19 | Bio-Resource Technology |
| 20 | Information & Communication T. (S/T/E) | 22 | Geography (S/T) |
| 21 | Economics (S/T) | 23 | Political Science (S/T/E) |
| 25 | History of Sri Lanka (S/T/E) | 25 A | History of India (S/T/E) |
| 25 B | History of Europe (S/T/E) | 25 C | History of Modern World (S/T/E) |
| 28 | Home Economics | 29 | Communication & Media Stu. (S/T/E) |
| 31 | Business Statistics (S/T/E) | 33 | Accounting (S/T/E) |
| 48 | Greek & Roman Civilization | 57 | Drama & Theatre (S) |
| 58 | Drama & Theatre (T) | 59 | Drama & Theatre (E) |
| 66 | Bio Systems Technology | 67 | Science for Technology (S/T/E) |
| 73 | English | 75 | Sanskrit |
| 78 | Arabic | 79 | Malay |
| 81 | French | 83 | Russian |
| 84 | Hindi | 86 | Chinese |
| 87 | Japanese | 88 | Korean |

- பிரதான பாடங்களுக்கு மேலதிகமாக இரண்டாவது பாடம் அல்லது இரண்டாவது மொழிமூலமாக மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கின்றீர்களாயின் அவ் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் நீங்கள் பதிவிறக்கம் செய்த வன்பிரதியினை மீள பிரதி செய்து இரண்டாவது மொழிமூலம் / இரண்டாவது பாடத்தினை High light செய்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்

- இரண்டாவது கட்டத்தில் மதிப்பீடு செய்யப்படும் பாடத்திற்கான ஆங்கில மொழிமூலமான மதிப்பீட்டிற்கு பங்குபற்ற எதிர்பார்த்துள்ளீர்களாயினும் விண்ணப்பத்தின் வன்பிரதி யொன்றினை அனுப்பி வைத்தல் வேண்டும்.